<u>சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்.</u>

முன்னிலை.– திருமதி.த.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,

சார்பு நீதிபதி, ஓமலூர்.

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 06–ம் நாள் சனிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.201/2024</u>

<u>(பழைய அசல் வழக்கு எண்.152/2002)</u>

<u>CNR No.TNSA16–000696–2024</u>

முத்துமாணிக்கம் ...வாதி

/எதிராக/

1. குருநாதன் (இறப்பு)
2. பூபாலன்
3. வேல்முருகன்
4. ஈஸ்வரன்
5. சின்னபொண்ணு (இறப்பு)
6. ஜி. பழனியம்மாள்
7. ஜி. நரசிம்மாள்
8. ஜி. அண்ணபூரணி
9. ஜி. கோதண்டவள்ளி
10. ரங்கேஷ் (எ) ஜெயராமகிருஷ்ணன்
11. முத்துகிருஷ்ணன் (எ) விக்னேஷ்

...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, கடந்த 08.04.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வரப்பெற்றபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. மோகன்குமார், அவர்கள் முன்னிலையாகியும், 2, 10, 11 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. மகாலிங்கம், அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் இறந்துவிட்டபடியால் அவர்கள் மீதான வழக்கு அற்று போயும், 3 முதல் 9

பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதிகள், 2, 10, 11 பிரதிவாதிகள் தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

தீர்ப்புரை

1) தாவா சொத்துக்களை 40 சம பங்குகளாக எல்லை வகுத்து பிரித்து, அதில் வாதிக்குரிய 8/40 பங்கினை தனியாகப் பிரித்து ஒதுக்கி வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டு முதல்நிலை தீர்ப்பாணை வழங்கவும், மேலும், இம்மாண்புமிகு நீதிமன்றம் நிர்ணயிக்கும் காலத்திற்குள் பிரதிவாதிகள் பாகப்பிரிவு செய்து வழங்கத் தவறினால், ஒரு ஆணையரை நியமித்து தாவா அட்டவணை சொத்துக்களை எல்லை வகுத்து பிரித்து, அதில் வாதிக்குரிய 8/40 பங்கினை தனியாக ஒதுக்கி வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடவும், மேலும், ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1315/2001 ஆக 25.04.2001 அன்று பதிவு செய்யப்பட்டு, குருநாதகவுண்டர் அவர்களால் 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகள் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாதது என்றும், அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாதது என்றும் விளம்புகை பரிகாரம் வழங்க கோரியும், தாவா சொத்துக்களில் வாதியின் அமைதியான சுவாதீனத்தை பிரதிவாதிகள் எந்த வகையிலும் தடுக்க கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும், வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி வழக்குரையின் சுருக்கம்

தாவா சொத்துக்கள் இந்நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளன. தாவா சொத்துக்கள் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். வாதி, 1 ஆம் பிரதிவாதியின் மகனாவார். வாதியும் பிரதிவாதிகளும் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகின்றனர். தாவா சொத்துக்கள் இதுவரை எல்லை வகுத்து பாகப்பிரிவு செய்யப்படவில்லை. தாவா சொத்துக்களில் வாதிக்கு 40–ல் 8 பங்கு உரிமை உள்ளது. வாதி, பஞ்சாயத்தார்கள் மூலமாக பலமுறை பிரதிவாதிகளிடம் தாவா சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்து

தனது பங்கினை வழங்குமாறு கோரியும், குறிப்பாக, கடந்த 16.11.2002 அன்று இறுதியாக பாகப்பிரிவினை செய்து தர கோரியபோது, பிரதிவாதிகள் அதற்கு மறுத்துவிட்டனர். எனவே, வாதி பாகப்பிரிவினை கோரி இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வாதியின் தந்தையான குருநாதன், கடந்த 25.04.2001 அன்று தனது பேரன்களான 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1315/2001 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் வாதிக்கு தெரியாமலும் மற்றும் வாதியின் சம்மதமின்றியும் எழுதப்பட்டதாகும். மேலும், அந்த ஆவணத்தில் வாதி ஒரு தரப்பினராகவும் இல்லை. எனவே, மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது.

மேலும், கடந்த 18.11.2002 அன்று பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சி செய்தனர். அதனை வாதி தடுத்த நிலையில், பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வெளியேறும்போது, இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்திவிடுவோம் என்று கூறிவிட்டு சென்றனர். பிரதிவாதிகளின் இச்செயல்களை நிரந்தர தடை உறுத்துக்கட்டளையால் மட்டுமே தடுக்க இயலும்.

எனவே, வாதி தாவா சொத்துக்களில் பாகப்பிரிவினை கோரியும், நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் 25.04.2001 ம் தேதியிட்ட ஆவண எண் 1315/2001–ஆகிய தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாதது என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாதது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

3) 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்.

தாவாவானது சட்டத்தின்படியும், வழக்குச் சங்கதிகளின்படியும்

நிலைக்கத்தக்கதல்ல. தாவா சங்கதிகளில் இப்பிரதிவாதி குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, ஏனைய அனைத்து சங்கதிகளையும் வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். எனவே, 1ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை அனுபவிக்கவும், விற்பனை செய்யவும் அல்லது வேறு வகையில் வில்லங்கப்படுத்தவும் முழு உரிமை உண்டு. தாவா சொத்துக்களில் வாதிக்கு எந்தவிதமான உரிமையோ, பங்கோ இல்லை. ஆகையால், தாவா சொத்துக்கள் தொடர்பாக கேள்வி எழுப்பவோ அல்லது பரிகாரம் கோரவோ வாதிக்கு உரிமை கிடையாது.

வாதி, உண்மையான சங்கதிகளை மறைத்தும், பொய்யான மற்றும் தவறான சங்கதிகளை முன்வைத்தும் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார். மேலும், இத்தாவாவிற்கு உரிய வழக்கு மூலம் (Cause of Action) எதுவும் இல்லை. தாவா சொத்துக்கள் தவறான முறையில் விவரிக்கப்பட்டுள்ளன. தாவா சொத்துக்களின் மதிப்பீடு சரியானதல்ல. அதேபோல், வாதியால் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணமும் சட்டத்திற்கிணங்க செலுத்தப்படவில்லை. எனவே, இத்தாவா சட்டத்திற்கும் சங்கதிகளுக்கும் முரணானதாக இருப்பதால், அதனை முழுமையாக தள்ளுபடி செய்யுமாறு கோரி 1, 2 ம் பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4) 11ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 10 பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுருரையின் சுருக்கம்

தாவாவானது சட்டத்தின்படியும் சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, ஏனைய அனைத்து சங்கதிகளையும் வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பது முற்றிலும் தவறானதாகும். வாதி, 1 ஆம் பிரதிவாதியின் மகன் என்பது உண்மை. ஆனால், வாதியும் பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களின் கூட்டுச் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தனர் என்பதும், தாவா சொத்துக்கள் இதுவரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்பதும் பொய்யான சங்கதிகள் ஆகும்.

மேலும், தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து தருமாறு வாதி கோரியதாகவும், அதற்கு பிரதிவாதிகள் மறுத்துவிட்டதாகவும் கூறுவதும் உண்மைக்கு புறம்பானதாகும். அதேபோல், பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சி செய்து வருவதாகவும், அதன் காரணமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் வாதி கூறியிருப்பது முற்றிலும் பொய்யானதாகும்.

உண்மையில், தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். எனவே, 1ஆம் பிரதிவாதிக்கு அவற்றை அனுபவிக்கவும், விற்பனை செய்யவும், வேறு வகையில் வில்லங்கப்படுத்தவும் முழு உரிமை உண்டு. ஆகையால், தாவா சொத்துக்கள் தொடர்பாக கேள்வி எழுப்பவோ அல்லது உரிமை கோரவோ வாதிக்கு எந்தவித உரிமையும் இல்லை. மேலும், வழக்கு நிலுவையில் இருந்தபோது, வாதி தாவாவை திருத்தம் செய்து, இரண்டாம் அயிட்ட சொத்தையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளார். 1ஆம் பிரதிவாதி, 25.04.2001 அன்று இப்பிரதிவாதிகள் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார். அதன் பின்னர், இப்பிரதிவாதிகள் தாவா சொத்தின் 2ஆம் அயிட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகின்றனர். தாவா சொத்தின் 2ஆம் அயிட்டத்திற்குரிய அனைத்து வருவாய்த்துறை ஆவணங்களும் இப்பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டு, அவர்களது பெயரிலேயே இருந்து வருகின்றன. வாதியும் அவரது சகோதரர்களும், இப்பிரதிவாதிகள் மேற்படி சொத்தை அனுபவித்து வருவதில் இடையூறு செய்த காரணத்தால், இப்பிரதிவாதிகள் இவளர் சிறுவர்களாக இருந்த காலத்தில், அவர்களது பாதுகாவலராக இருந்து 2ஆம் பிரதிவாதி, ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.110/2002 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தி வந்தார்.

பின்னர், இப்பிரதிவாதிகள் உரிய வயதை அடைந்ததும், உரிய மனு தாக்கல் செய்து அனுமதி பெற்று அவர்கள் வழக்கைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். அதன் விளைவாக, கடந்த 16.07.2018 அன்று இப்பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்விபரம் வாதிக்கு நன்கு தெயும். மேலும், கடந்த 25.04.2001

தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து வாதிக்கு ஆரம்பம் முதலே தெரிந்திருந்த நிலையிலும், மேற்படி ஆவணத்தை செல்லாதது மற்றும் இல்லாநிலையது என்று அறிவிக்க, சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் விளம்புகை பரிகாரம் கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இவ்வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தாவா சொத்தின் 2 ஆம் அயிட்டம் கூட்டுக்குடும்ப சொத்து அல்ல. அது இப்பிரதிவாதிகளின் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தாகும். இத்தாவாவிற்கு உரிய வழக்கு மூலம் (Cause of Action) எதுவும் இல்லை. தாவா உரிய முறையில் வரையப்படவில்லை. தாவா சொத்தின் மதிப்பீடு தவறாக செய்யப்பட்டுள்ளது. மேலும், செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணமும், சொத்து விவரங்களும் சட்டப்படி சரியானவை அல்ல. எனவே, இத்தாவா சட்டத்திற்கும் சங்கதிகளுக்கும் முரணானதாக இருப்பதால், அதனை முழுமையாக தள்ளுபடி செய்யுமாறு கோரி இப்பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

5) மேற்கண்ட வழக்குரை, எதிர்வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் 17.12.2018 ம் தேதியில் கீழ்க்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டன.–

1. தாவா சொத்தை 40 சம பாகங்களாக பிரித்து அதில் 8 பாகத்தை வாதிக்கு பிரித்து தரக்கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. தாவாவில் வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன ?

பின்னிட்டு 10,11 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டு 10,11 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு கடந்த 12.08.2025 ம் தேதியில் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டது.

6) கூடுதல் எழுவினாக்கள்–

1. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா
2. தாவாவானது கால வரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டதா ?

7) இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி முத்துமாணிக்கம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும் அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், லட்சுமணன் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், பிரதிவாதிகள் தரப்பில் பூபாலன் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், முத்துகிருஷ்ணன் (எ) விக்னேஷ் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும் அவர் தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் இருக்கின்றது.

8) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

9) வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் பிரதிவாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் ஆகியவைகளை பரிசீலித்தபோது, தாவா பிரச்சனைகளை தீர்ப்பதற்காக மேற்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ள நிலையில் தாவாவின் எந்த சூழ்நிலையிலும் எந்த எழுவினாவினையும் திருத்தியோ, கூட்டியோ அமைக்க உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 14 விதி 5–ல் வழி வகை செய்துள்ளது. எனவே இந்த வழக்கை தீர்மானிப்பதற்காக கூடுதல் எழுவினா வனைந்தால் தான் வழக்கில் பிரச்சனையில் உள்ள சங்கதிகளை தீர்க்க உகந்ததாக இருக்கும் என்பதால் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டது.

<u>கூடுதல் எழுவினா–1</u>

1. தாவா சொத்து 1ம் பிரதிவாதியுடைய தனிப்பட்ட சொத்தா? அல்லது கூட்டுக்குடும்ப சொத்தா?

எழுவினாக்களை திருத்தி வனைந்தபின்பு உபயவாதிகளுக்கு மீண்டும் தங்கள் தரப்பில் சாட்சிய விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும் என்றாலும் கூட இந்த வழக்கில் மேற்கண்ட எழுவினாவை தீர்க்கும் விதமாகவே உபயவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிருத்தம் செய்யப்பட்டுள்ளதால் மீண்டும் சாட்சிய விசாரணை தேவை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களின் வரிசை மாற்றம் செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

10) வரிசை மாற்றம் செய்யப்பட்ட எழுவினாக்கள்

1. தாவா சொத்து 1ம் பிரதிவாதியுடைய தனிப்பட்ட சொத்தா? அல்லது கூட்டுக்குடும்ப சொத்தா?
2. தாவாவானது கால வரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டதா?
3. தாவா சொத்தை 40 சம பாகங்களாக பிரித்து அதில் 8 பாகத்தை வாதிக்கு பிரித்து ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
4. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
5. தாவாவில் வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
6. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

11) எழுவினா 1ற்கான தீர்வு – தாவா சொத்து 1ம் பிரதிவாதியுடைய தனிப்பட்ட சொத்தா? அல்லது கூட்டுக்குடும்ப சொத்தா?

வாதுரை, பதிலுரை மற்றும் இருதரப்பு சாட்சிகள், சான்றாவணங்களின் துணையுடன் மேற்கண்ட எழுவினா கீழ்க்கண்டவாறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வாதியும், 2 முதல் 4ஆம் பிரதிவாதிகளும், 1ஆம் பிரதிவாதி மற்றும் 5ஆம் பிரதிவாதியின் ஆண் வாரிசுகள் என்பதும், 6 முதல் 9ஆம் பிரதிவாதிகள் மேற்கண்ட 1 மற்றும் 5ஆம் பிரதிவாதிகளின் பெண் வாரிசுகள் என்பதும், 10 மற்றும் 11ஆம் பிரதிவாதிகள் 2ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 03.12.2002 அன்று, வாதி 1 முதல் 4ஆம் பிரதிவாதிகள் மீது மட்டும் தாவாவின் 1ஆம் அயிட்ட சொத்தில் 1/5 பங்கினை பாகப்பிரிவினை செய்து தரக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பின்னர், 1ஆம் பிரதிவாதி இறந்துவிட்டதால், அவரது மனைவியான 5ஆம் பிரதிவாதி வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு, தாவாவின் 1ஆம்

அயிட்ட சொத்தை 25 சம பங்குகளாகப் பிரித்து அதில் 6 பங்குகளை வாதிக்கு ஒதுக்கக் கோரி, பிராது 25.06.2014 அன்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அதன்பின்னர், 5 ஆம் பிரதிவாதியும் இறந்துவிட்ட நிலையில், 1 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளின் பெண் வாரிசுகளான 6 முதல் 9 ஆம் பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டதுடன், தாவாவின் 1 ஆம் அயிட்ட சொத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்குரிய 6/25 பங்கு என்பது 8/40 பங்கு என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 27.06.2024 அன்று தாவாவின் 2 ஆம் அயிட்ட சொத்து சேர்க்கப்பட்டு, 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகளும் தரப்பினர்களாக இணைக்கப்பட்டு, 1 ஆம் பிரதிவாதி 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகளின் பெயரில் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் எண்.1315/2001 செல்லாதது மற்றும் இல்லா நிலையது என விளம்புகை செய்யக் கோரி தாவா பரிகாரம் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

வாதி, 03.12.2002 அன்று தாவா தாக்கல் செய்தபோது, தாவா சொத்து வாதி மற்றும் 1 முதல் 4 ஆம் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிட்டுள்ளார். அதனை நிரூபிப்பதற்காக, 1 ஆம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினருக்கிடையே ஏற்பட்ட 23.04.2001 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை வாதி வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். எனினும், அந்தப் பத்திரம் குறித்து வாதுரையில் எவ்வித குறிப்பும் செய்யப்படவில்லை.

வாதி தரப்பில், பாகம் பிரியாத கூட்டுக்குடும்பச் சொத்தைப் பொறுத்தவரை, 1 ஆம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கும் உரிமை இல்லை என்றும், எனவே சட்டத்தின் பார்வையில் வா.சா.ஆ.4 ஆவணம் அடிமுதலே செல்லாத ஆவணம் என்றும், ஆகையால் தாவா சொத்தினை 40 சம பங்குகளாகப் பிரித்து அதில் 8 பங்குகளை வாதிக்கு ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டுமென பரிகாரம் கோரியுள்ளார்.

தாவா சொத்தின் கூட்டு பங்குதாரர்களாக வாதியால் குறிப்பிடப்பட்டுள்ள 2 ம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகள் அனைவரும் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டுள்ளார்கள். வாதி 03.12.2002 ம் தேதியன்று இந்த வழக்கை தாக்கல் செய்தபோது தாவா 1 வது அயிட்டத்தை மட்டுமே சொத்துவிவரமாக காட்டி

பாகப்பிரிவினை பரிகாரம் கோரியிருக்கிறார். மேலும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் குறித்து வாதிக்கு முன்பே தெரியும் என்றும், ஏனெனில் தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பயனாளியாக 10, 11 பிரதிவாதிகள் அது எழுதப்பட்ட காலத்தில் மைனர்களாக இருந்ததால் 2ம் பிரதிவாதி கார்டியனாக இருந்து தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தை அனுபவிப்பதை தடை செய்த வாதி, 1,3,4 பிரதிவாதிகள் மற்றும் 3,4 பிரதிவாதிகள் வாரிசுகள் மீது தடைஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஓமலூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.110/2002 என்ற அசல் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றும், அதில் 10,11 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் மேற்படி தீர்ப்பினை எந்த வகையிலும் ஆட்சேபனை செய்யாமல் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது தாவா 2 வது அயிட்ட சொத்தையும், 10,11 பிரதிவாதிகளையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்று வாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், தாவா சொத்து குருநாத கவுண்டரின் தனிப்பட்ட சொத்து என்பதாலேயே மேற்படி தீர்ப்பை எதிர்த்து வாதியோ அல்லது வேறு தரப்பினர்களோ மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அதிலிருந்தே தாவா சொத்துக்கள் குருநாதகவுண்டரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதை வாதியும் ஏற்றுக்கொண்டதாக கருதப்பட வேண்டும் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எனினும், தாவாவின் 1ஆம் அயிட்ட சொத்தைப் பொறுத்தவரை குருநாத கவுண்டர் எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டதால், அதனைப் பாகம் பிரித்துத் தருவதற்கு தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கும்போது, வா.சா.ஆ.1 என குறியிடப்பட்ட 23.04.2001 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 1ஆம் பிரதிவாதிக்கு 'பி' அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டிருப்பதும், அதில் 1ஆம் பிரதிவாதியும் ஒரு தரப்பினராக இருப்பதும் தெரியவருகிறது.

இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 92-ஐ பரிசீலிக்கும்போது:

"When the terms of a contract, grant, disposition of property, or any matter required by law to be reduced to writing have been proved by producing the document, no evidence of any oral

agreement or statement shall be admitted for the purpose of contradicting, varying, adding to, or subtracting from its terms."

ஒரு ஆவணத்தை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்ட நபர், பின்னர் அதிலுள்ள சங்கதிகளை சட்டம் வகுத்துள்ள வழியில்லாமல் வேறு வழியில் மறுக்க இயலாது. எனவே, வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1 ஆம் பிரதிவாதி, தாவாவின் 1 மற்றும் 2 ஆம் அயிட்ட சொத்துக்கள் பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டவை என ஒப்புக்கொண்டுள்ள நிலையில், பின்னர் அதனை மறுத்து, வா.சா.ஆ.1 வழியாக தனக்கு வந்த சொத்து தனிப்பட்ட சொத்து எனக் கூற இயலாது. வாதி, தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என வாதுரைத்து, அதனை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நிரூபித்துள்ளார். அந்த நிலையை மறுக்கும் 2, 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகள் தான், தாவா சொத்து 1 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எந்தச் சாட்சியமோ சான்றாவணமோ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இந்த எழுவினாவை வாதிக்கு ஆதரவாகத் தீர்வு காண்கிறது.

<u>12) எழுவினா 2 ற்கான தீர்வு – தாவாவானது கால வரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டதா?</u>

இதுகுறித்து பரிசீலிக்கும்போது, இந்த வழக்கு 03.12.2002 அன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது. 2, 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகள் தரப்பில், இந்தத் தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் 10 மற்றும் 11 பிரதிவதிகளால் கடந்த 20.08.2002 அன்று வாதி, 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் மற்றும் அவர்களது வாரிசுகள் மீது நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.110/2002 என்ற வழக்கு தொடரப்பட்டு தீர்ப்பு பெற்றிருப்பதாக வாதம் செய்யப்பட்டுள்ளது. எனவே, வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறையில் இருந்தது என்பது 2002 ஆம் ஆண்டிலேயே வாதிக்கு தெரிந்திருந்த நிலையில், வாதி இத்தாவாவை தாக்கல் செய்தபோது அ.வ.எண்.110/2002 வழக்கில் குறிப்பிடப்பட்ட சொத்தையும்

பாகப்பிரிவினைக்குட்படுத்தக் கோரி எந்தவித பரிகாரமும் கோரவில்லை என்றும், 20.08.2002 முதலே வா.சா.ஆ.4 ஆவணம் குறித்து வாதி அறிந்திருந்த நிலையிலும், சுமார் 21 ஆண்டுகள் கழித்து 18.08.2023 அன்று தான் தாவாவின் 2 ஆம் அயிட்ட சொத்திலும் பாகம் பிரித்துத் தரக் கோரியும், வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாதது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில் காலவரையறைச் சட்டம் சரத்து 58–ன் படி இத்தகைய விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்பதால், தாவா காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று 2, 10 மற்றும் 11 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே எழுவினா எண் 1 ன் மூலம் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்று தீர்வு முடிவு காணப்பட்டுள்ளது. எனவே, பாகம் பிரியாத இந்து கூட்டுக்குடும்பச் சொத்தில் குடும்ப கர்த்தா, பிற கூட்டுப்பங்குதாரர்களின் அனுமதியின்றி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமையுடையவர் அல்ல.

இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் AIR 1964 SC 510 என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

"A father or Karta cannot make a gift of joint family property so as to prejudice the interests of other coparceners, except to the limited extent permitted under Hindu law."

அதாவது, இந்து சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வரம்புகளைத் தவிர்த்து, குடும்பத்தின் பிற கூட்டுப்பங்குதாரர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில், ஒரு தந்தையோ அல்லது குடும்ப கர்த்தாவோ கூட்டுக்குடும்பச் சொத்தினை தானமாக வழங்க இயலாது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேதகு சென்னை உயர்நீதிமன்றமும் *2026 (2) CTC 227* என்ற வழக்கில் மேற்கண்ட கொள்கையையே வலியுறுத்தியுள்ளது.

"*Thus, a settlement or gift of coparcenary property by the Karta in favour of one coparcener, without the consent of the others, is void ab initio and does not bind the non–consenting coparceners. A unilateral settlement by the Karta of joint family property in favour of*

one heir, to the exclusion of the other, is non est in law and can be safely ignored in a suit for partition."

எனவே, பாகம் பிரியாத கூட்டுக்குடும்பச் சொத்தில், பிற கூட்டுப்பங்குதாரர்களின் சம்மதமோ உரிமையோ இல்லாமல் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டால் அது சட்டத்தின் பார்வையில் அடிமுதலே செல்லாத ஆவணமாகக் கருதப்பட வேண்டும்.

எனவே, வா.சா.ஆ.4 ஆவணம் சட்டத்தின் பார்வையில் செல்லாத ஆவணம் (*Non est in the eye of law)* ஆகும். மேலும், அந்த ஆவணம் உருவாக்கப்பட்ட காலத்திலேயே செல்லாத ஆவணமாக இருக்கிறன்றது. எனவே *Nemo dat quod non habet* என்ற சட்ட முதுமொழியின்படி, "தன்னிடம் இல்லாத உரிமையை ஒருவர் மற்றொருவருக்கு வழங்க இயலாது" எனவே மேற்படி சட்டமுதுமொழி இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தும். ஆகவே, வா.சா.ஆ.4 ஆவணம் அடிமுதலே செல்லாத ஆவணமாக இருப்பதால், அதனைச் ஆட்சேபிக்க காலவரையறை இல்லை என்றும் இதற்கு கால வரையறைச் சட்டம் பொருந்தாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், *Prithi Pal Singh and Another Vs. Amrik Singh and Others,* (2013) 9 SCC 576 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:

> *"The amendment in the plaint would relate back to the date of filing of the suit and the amended suit was not barred by limitation."*

அதாவது, வழக்கில் செய்யப்பட்ட திருத்தம், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அசல் தேதியிலிருந்தே அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே, 10 மற்றும் 11ஆம் பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டதும், தாவாவின் 2ஆம் அயிட்ட சொத்து தாவா சொத்து விவரத்தில் சேர்க்கப்பட்டதும் பின்னாளில் நிகழ்ந்திருந்தாலும், மேற்கண்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அந்தத் திருத்தம் தாவா தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்தே அமலுக்கு வந்ததாகக்

கருதப்பட வேண்டும். ஆகையால், மேற்கண்ட பரிசீலனைகளின் மூலம் தாவா காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இந்த எழுவினா வாதிக்கு ஆதரவாகத் தீர்வு காணப்படுகிறது.

<u>13) எழுவினா 3ற்கான தீர்வு – தாவா சொத்தை 40 சம பாகங்களாக பிரித்து அதில் தலா 8 பாகத்தை வாதிக்கு பிரித்து ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?</u>

மேற்கண்ட எழுவினா குறித்து பரிசீலிக்கும்போது, தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், தாவாவானது காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றும் ஏற்கனவே எழுவினா எண்.1 மற்றும் 2–ன் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே வாதி, பிரதிவாதிகள் அனைவருக்கும் தாவா சொத்துக்களில் பாக உரிமை உண்டு என்பது தெளிவாகிறது. வாதி, தாவா சொத்துக்களை 40 சம பாகங்களாகப் பிரித்து அதில் 8/40 பங்கினை தனக்கு ஒதுக்க கோரி வாதி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

Vineeta Sharma v. Rakesh Sharma என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி, இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956–இன் பிரிவு 6–ன் கீழ் பெண் வாரிசுகளும் கூட்டுக்குடும்பச் சொத்தின் இணை பங்குதாரர்களாக (Coparceners) கருதப்படுவர். ஆண் வாரிசுகளைப் போலவே பெண் வாரிசுகளுக்கும் பிறப்பின் அடிப்படையிலேயே கூட்டுக்குடும்பச் சொத்தில் பங்குரிமை உருவாகிறது என்று அத்தீர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 1 மற்றும் 5–ஆம் பிரதிவாதிகளான குருநாதன் மற்றும் சின்னப்பொன்னு ஆகியோரின் வாரிசுகளாக வாதி முத்துமாணிக்கம், 2 முதல் 4–ஆம் பிரதிவாதிகளான பூபாலன், வேல்முருகன், ஈஸ்வரன் மற்றும் 6 முதல் 9–ஆம் பிரதிவாதிகளான பழனியம்மாள், நரசம்மாள், அண்ணபூரணி, கோதண்டவள்ளி ஆகியோர் இருக்கின்றனர் என்பது பதிவுகளின் மூலம் தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணத்திலும் 1–ஆம் பிரதிவாதி மேற்படி வாரிசுகள் குறித்த விபரங்களை குறிப்பிட்டுள்ளார். எனவே, குருநாதனின் சொத்துக்கள் இந்து

வாரிசுரிமைச் சட்டம், 1956–இன் பிரிவு 6–ன் படி வாதி மற்றும் 2 முதல் 4 மற்றும் 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு சமமாக உரிமையுடையதாகும். வாதி தாவா சொத்துக்களை 40 சம பாகங்களாகப் பிரித்து அதில் 8 பாகங்களை தனக்கு ஒதுக்குமாறு கோரியிருந்தாலும், குருநாதனுக்கு மொத்தம் 8 வாரிசுகள் இருப்பதால், தாவா சொத்துக்களை 8 சம பாகங்களாகப் பிரித்து அதில் ஒரு சம பங்கினை வாதிக்கு ஒதுக்குவதே சட்டத்திற்கும் நியாயத்திற்கும் ஏற்புடையதாகும்.

எனவே, தாவா சொத்துக்களை 8 சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு சம பங்கினை வாதிக்கு ஒதுக்கி முதற்கட்ட தீர்ப்பாணை (Preliminary Decree) வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையால், இந்த எழுவினாவும் வாதிக்கு ஆதரவாகத் தீர்வு காணப்படுகிறது.

<u>14) எழுவினா 4ற்கான தீர்வு – வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?</u>

ஏற்கனவே எழுவினா 1ன்படி தாவா சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்று தீர்வு காணப்பட்டிருக்கிறது. மற்றும் தாவாவானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்று எழுவினா 2ற்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது. எழுவினா 1ற்கு தீர்வு காணும்போதே வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதி வைக்க 1ம் பிரதிவாதிக்கு உரிமையில்லை என்றும் மேற்படி ஆவணம் அடிமுதலே செல்லாத ஆவணம் என்றும், முடிவு காணப்பட்டிருக்கிறது. மேலும், 10, 11 பிரதிவாதிகள் ஏற்கனவே ஓமலூர் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அ.வ.எண்110/2002 என்ற வழக்கின் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றிருந்தாலும்கூட விளம்புகை பரிகாரம் எதுவும் பெறவில்லை. மேலும், ஒரு கூட்டுக்குடும்ப சொத்தில் குடும்ப உறுப்பினர் ஒருவருடைய சுவாதீனம் என்பது அந்த கூட்டுக்குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களின் சுவாதீனமும் ஆகும். மேலும், கூட்டுக்குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது என்று பல முன் தீர்ப்புகள் இருக்கின்றது. அ.வ.எண்.110/2002 வழக்கில் விளம்புகை பரிகாரம் எதுவும் வழங்கப்படாத நிலையில் மேற்படி வழக்கு இந்த வழக்கை பாதிப்பதாக இருப்பதாக கருத

இயலாது. எனவே, வாதி கோரியபடி 25.04.2001ம் தேதியிட்ட ஓமலூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1315/2001 ஆன வா.சா.ஆ.4 ஆவணம் இல்லா நிலையது மற்றும் செல்லாதது என்று விளம்புகை பரிகாரம் பெற வாதி உரிமையுடையவர் என்று முடிவு செய்து இந்த எழுவினாவும் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

<u>15) எழுவினா 5ற்கான தீர்வு – தாவாவில் வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?</u>

ஏற்கனவே எழுவினா எண்.1–ன் மூலம் தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதுடன், தாவா சொத்தில் வாதிக்கு 1/8 பங்கு பெற உரிமை உண்டு என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்களில் உரிமையும் பங்கும் இருப்பது மறுக்க முடியாததாகும்.

வாதி, தாவா முடிவடையும் வரையில் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்தவோ அல்லது பாராதீனம் செய்யவோ கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். எனினும், கூட்டுக்குடும்பச் சொத்தில் ஒவ்வொரு கூட்டுப்பங்குதாரருக்கும் உரிமையும் சுவாதீனமும் இருப்பதால், மற்ற கூட்டுப்பங்குதாரர்களுக்கு எதிராக இத்தகைய நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்க இயலாது. எனவே, வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற உரிமையற்றவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையால், இந்த எழுவினாவானது வாதிக்கு எதிராகத் தீர்வு காணப்படுகிறது.

<u>16) எழுவினா 6ற்கான தீர்வு – வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?</u>

வழக்கின் தன்மை, வழக்கில் இருதரப்பினரின் உறவுமுறை மற்றும் இதர சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, செலவுத் தொகை தனிப்பட்ட முறையில் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இருதரப்பினரும் தங்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, தாவா பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

1) வாதி கோரியுள்ள 8/40 பங்கிற்குப் பதிலாக, தாவா சொத்துக்களை 8 சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு சம பங்கினை வாதிக்கு ஒதுக்கி முதற்கட்ட தீர்ப்பாணை (Preliminary Decree) வழங்கப்படுகிறது.

2) மேலும், ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1315/2001 ஆக, 25.04.2001 அன்று பதிவு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது மற்றும் செல்லாநிலையது என்று விளம்புகை செய்யப்படுகிறது.

3) வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பொறுத்தவரை, தாவா தள்ளுபடி செய்யப்படுகிறது.

4) செலவுத்தொகை குறித்து எந்த உத்தரவும் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பிழைதிருத்தம் செய்யப்பட்டு என்னால் இந்நீதிமன்றத்தில் 2026–ஆம் வருடம் ஜீன் மாதம் 06ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– த.மாலதி,

சார்பு நீதிபதி,
ஓமலூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>

வா.சா.1 – முத்துமாணிக்கம் மற்றும் வா.சா.2 – லட்சுமணன்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

வா.சா.ஆ.1	23.04.2001	பாகப்பிரிவினை பத்திரம்	சான்று நகல்
வா.சா.ஆ 2	18.11.2002	வழக்கு சொத்திற்கான 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.178	உண்மை நகல்
வா.சா.ஆ 3	18.11.2002	வழக்கு சொத்திற்கான பட்டா எண்.1028	உண்மை நகல்
வா.சா.ஆ 4	25.04.2001	1 ம் பிரதிவாதி, 10, 11 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.1315/2001	சான்றிட்ட நகல்

வா.சா.ஆ 5	17.08.2023	புல எண்.42/6A2B, 6A3B. 6C5B க்கான பட்டா, பட்டா எண்.1432	கணிணி நகல்

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>

பி.வா.சா.1 – பூபாலன் மற்றும் பி.வா.சா.2 – முத்துகிருஷ்ணன் (எ) விக்னேஷ்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

பி.வா.சா.ஆ.1	25.04.2001	தான செட்டில்மெண்ட் பத்திரம்	சான்றிட்ட நகல்
பி.வா.சா.ஆ.2	17.12.2001	10 மற்றும் 11 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா (பட்டா எண்.1432)	சான்றிட்ட நகல்
பி.வா.சா.ஆ.3	16.08.2002	சிட்டா	உண்மை நகல்
பி.வா.சா.ஆ.4	16.08.2002	அடங்கல்	உண்மை நகல்
பி.வா.சா.ஆ.5	10.01.2002	பட்டா எண்.1432 க்கு 2ம் பிரதிவாதி செலுத்திய கந்தாய ரசீது	அசல்
பி.வா.சா.ஆ.6	21.01.2003, 29.12.2004	பட்டா எண்.1432 க்கு 10ம் பிரதிவாதி செலுத்திய கந்தாய ரசீது (2 எண்ணிக்கை)	அசல்
பி.வா.சா.ஆ.7	16.07.2018	அ.வ.எண்.110/2002 ல் ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு	சான்றிட்ட நகல்
பி.வா.சா.ஆ.8	16.07.2018	அ.வ.எண்.110/2002 ல் ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணை	சான்றிட்ட நகல்

ஒப்பம்/– த.மாலதி,

சார்பு நீதிபதி,
ஓமலூர்.